# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| 01. | வளம் தரும் வைகாசி மாதம் | 01 |
| 02. | விஷ்ணுபதி புண்ணியகாலம்! | 03 |
| 03. | பிள்ளை வரம் தரும் சஷ்டி விரத நாளில்.. என்ன செய்யலாம்? | 06 |
| 04. | பாவங்களை போக்கும் வரூதினி ஏகாதசி | 08 |
| 05. | சனி மஹா பிரதோஷம் | 11 |
| 06. | வைகாசி மாத சிவராத்திரி | 13 |
| 07. | வைகாசி மாத வளர்பிறை சதுர்த்தி | 16 |
| 08. | வைகாசி விசாகத்தின் சிறப்புகள் | 17 |
| 09. | முருகப்பெருமானும், வைகாசி விசாகமும் | 18 |
| 10. | வைகாசி விசாகம்... விரதம் இருப்பவர்களின் கவனத்திற்கு! | 22 |
| 11. | வைகாசி பௌர்ணமி | 23 |
| 12. | வைகாசி மாதத்தில் பிறந்தவர்களின் குணாதிசயங்கள் | 25 |
| 13. | வைகாசி மாத சுப தினங்கள் | 28 |
| 14. | சந்திராஷ்டம தினங்கள் | 30 |
| 15. | வைகாசி மாத விரத தினங்கள் | 32 |
| 16. | வைகாசி மாத ராசிபலன் | 35 |



## வளம் தரும் வைகாசி மாதம்

வளம் தரும் வைகாசி மாதத்தை மாதவ மாதம் என்றும், வைகாசம் என்றும் போற்றுவர். சாஸ்திரங்கள் போற்றும் சிறப்புமிக்க வைகாசி மாதத்தின் முதல் நாள் கங்கை நதியில் புனித நீராடுவது என்பது ஏழேழு ஜென்மங்களில் செய்த பாவங்கள் அனைத்தையும் கழுவிவிடும் என்பது நம்பிக்கை. வைகாசி மாதத்திற்கு விசாகம் என்ற அழகான பெயரும் உண்டு. “விசாகம்” என்றால் “மலர்ச்சி” என்று பொருள் தருவது எவ்வளவு பொருத்தமானது! இந்த மங்களகரமான மாதம்தான் வடமொழியில் வைசாகம் என்று போற்றப்படுகிறது. விஷ்ணு புராணத்தின் புனிதமான வரிகள், வைகாசி மாத புண்ணிய நதிகளில் நீராடி, மகாவிஷ்ணுவை தூய துளசி இலைகளால் அர்ச்சனை செய்பவர்களுக்கு நற்பேறுகள் வந்து சேரும் என்று உறுதியளிக்கின்றன.

புராண இதிகாசங்கள் வைகாசி மாதத்தின் மகத்துவத்தை மேலும் உயர்த்துகின்றன. பல்வேறு தெய்வ அவதாரங்கள் இந்த புனித மாதத்தில் நிகழ்ந்ததாக அவை கூறுகின்றன. குறிப்பாக, வைகாசி மாதத்தின் பௌர்ணமி திதி மிகவும் சிறப்பானது. அன்றுதான், சிவபெருமானின் நெற்றிக்கண்ணில் இருந்து வெளிப்பட்ட அந்த ஒளிப்பிழம்புகள், சரவணப்பொய்கையின் தூய்மையான நீரில் ஆறு அழகிய குழந்தைகளாக அவதரித்தன. இந்த தெய்வீக நிகழ்வு வைகாசி மாதத்தின் புனிதத்தையும், சிறப்பையும் பறைசாற்றுகின்றது.

விரும்புவார்கள். மனதின் கசப்புகளையும், கோபத்தையும் வெளிக்காட்டாமல் அடக்கிக் கொள்ளும் சக்தி படைத்தவர்கள்.



## குடும்ப உறவுகளும் பொருளாதார நிலையும்:

குடும்பத்தில் இவர்களே முக்கியமான நபராகத் திகழ்வார்கள். உற்றார், உறவினர், உடன்பிறந்தோர் என அனைவரையும் அனுசரித்துச் செல்லும் பண்பு இவர்களிடம் இருக்கும். சில விஷயங்களில் பிடிவாதமாக இருந்து, தான் நினைத்ததை சாதிக்கும் திறன் கொண்டவர்கள். குற்றம், குறைகளைச் சரியான நேரத்தில் சுட்டிக்காட்டத் தயங்க மாட்டார்கள். இவர்களது கைகளில் எப்பொழுதும் பணம் இருந்து கொண்டே இருக்கும். தங்களின் சொந்தத் தேவைக்கும், ஆசைக்கும் செலவு செய்ய தயங்க மாட்டார்கள்.

## தொழில் மற்றும் வியாபாரத் திறன்கள்:

தொழில், வேலைவாய்ப்பு, வியாபாரம் போன்ற துறைகளில் சிறந்த நிர்வாகத் திறனையும், சமயோசித புத்தியையும், தந்திரோபாயங்களையும் வெளிப்படுத்துவார்கள். பல்துறை வித்தகர்களாகவும், கலைத்துறையில் சாதனை படைக்கும் யோகம் பெற்றவர்களாகவும் இருப்பார்கள். சிறந்த பேச்சாளர்கள், எழுத்தாளர்கள், பதிப்பக உரிமையாளர்கள், அச்சகத் தொழில் செய்பவர்கள் எனப் பல திறமைகளை உள்ளடக்கியவர்கள்.

பயணங்கள் செய்வதில் மிகுந்த ஆர்வம் கொண்டவர்கள். சுற்றுலாக்கள், புனித ஸ்தலங்களுக்குச் செல்வது இவர்களுக்கு மிகவும் பிடித்தமான ஒன்று. உல்லாசப் பயணங்களிலும் விருப்பம் உடையவர்கள். தனிமையை விரும்பி, இயற்கை, கலை,

அழகு போன்றவற்றை ஆராதிப்பவர்கள். தங்களின் பயண அனுபவங்களை மற்றவர்களிடம் மிகுந்த ரசனையுடன் பகிர்ந்து கொள்வார்கள்.

உஷ்ணம் மற்றும் வயிற்றுக் கோளாறுகள் இவர்களுக்கு அடிக்கடி உண்டாகும். ரத்த சம்பந்தமான குறைபாடுகள் இருக்க வாய்ப்புண்டு. சைனஸ், தும்மல், ஒற்றைத் தலைவலி போன்ற பிரச்சனைகளால் அவதிப்படுவார்கள். முதுமையில் ஞாபக மறதி நோய் வருவதற்கான வாய்ப்புகள் உண்டு. நரம்புத் தளர்ச்சி பிரச்சனையும் ஏற்படக்கூடும்.

## வாழ்க்கைத் துணை மற்றும் கிரக நிலைகள்:

நல்ல ஆற்றலும், நிர்வாகத் திறமையும் உள்ள வாழ்க்கைத்துணை இவர்களுக்கு அமைவார்கள். சில சமயங்களில் இருவருக்கும் கருத்து வேறுபாடுகள் வரலாம். புதன், செவ்வாய், சுக்கிரன் சாதகமாக அமைந்திருந்தால், மனைவி மூலம் பல யோகங்களையும், போகங்களையும், சுகங்களையும் அனுபவிப்பார்கள். ஒரு சிலருக்கு உயர்ந்த பதவி, புகழ், செல்வம், செல்வாக்குள்ள மனைவி அமைவதற்கான யோகமும் உண்டு.



# வைகாசி மாத சுபமுகூர்த்த தினங்கள்

(சுபமுகூர்த்த நாட்கள் திருக்கணித பஞ்சாங்கத்தில் அடிப்படையில் கணிக்கப்பட்டுள்ளது)

### திருமணம் செய்ய உகந்த நாள்
வைகாசி 02 16.05.2025 வெள்ளி
வைகாசி 04 18.05.2025 ஞாயிறு
வைகாசி 05 19.05.2025 திங்கள்
வைகாசி 11 25.05.2025 ஞாயிறு
வைகாசி 23 06.06.2025 வெள்ளி
வைகாசி 25 08.06.2025 ஞாயிறு

### சீமந்தம் செய்ய உகந்த நாள்
வைகாசி 02 16.05.2025 வெள்ளி
வைகாசி 04 18.05.2025 ஞாயிறு
வைகாசி 05 19.05.2025 திங்கள்
வைகாசி 11 25.05.2025 ஞாயிறு
வைகாசி 23 06.06.2025 வெள்ளி
வைகாசி 25 08.06.2025 ஞாயிறு

### கிரக ஆரம்பம் செய்ய உகந்த நாள்
வைகாசி 02 16.05.2025 வெள்ளி
வைகாசி 04 18.05.2025 ஞாயிறு
வைகாசி 05 19.05.2025 திங்கள்
வைகாசி 11 25.05.2025 ஞாயிறு
வைகாசி 23 06.06.2025 வெள்ளி
வைகாசி 25 08.06.2025 ஞாயிறு

### புதிய வண்டி வாங்க உகந்த நாள்
வைகாசி 02 16.05.2025 வெள்ளி
வைகாசி 04 18.05.2025 ஞாயிறு
வைகாசி 05 19.05.2025 திங்கள்
வைகாசி 11 25.05.2025 ஞாயிறு
வைகாசி 23 06.06.2025 வெள்ளி
வைகாசி 25 08.06.2025 ஞாயிறு

### தொழில் துவங்குவதற்கு உகந்த நாள்
வைகாசி 02 16.05.2025 வெள்ளி
வைகாசி 04 18.05.2025 ஞாயிறு
வைகாசி 05 19.05.2025 திங்கள்
வைகாசி 11 25.05.2025 ஞாயிறு
வைகாசி 23 06.06.2025 வெள்ளி
வைகாசி 25 08.06.2025 ஞாயிறு

### காது குத்து வைக்க உகந்த தினம்
வைகாசி 02 16.05.2025 வெள்ளி
வைகாசி 04 18.05.2025 ஞாயிறு
வைகாசி 05 19.05.2025 திங்கள்
வைகாசி 23 06.06.2025 வெள்ளி
வைகாசி 31 14.06.2025 சனி

### கணபதி ஹோமம் செய்வதற்கு உகந்த நாட்கள்
வைகாசி 02 16.05.2025 வெள்ளி
வைகாசி 04 18.05.2025 ஞாயிறு
வைகாசி 05 19.05.2025 திங்கள்
வைகாசி 08 22.05.2025 வியாழன்
வைகாசி 11 25.05.2025 ஞாயிறு
வைகாசி 16 30.05.2025 வெள்ளி
வைகாசி 18 01.06.2025 ஞாயிறு
வைகாசி 23 06.06.2025 வெள்ளி
வைகாசி 25 08.06.2025 ஞாயிறு

### திலஹோமம் / பித்ரு பூஜை செய்வதற்கு உகந்த நாட்கள்
வைகாசி 01 15.05.2025 வியாழன்
வைகாசி 07 21.05.2025 புதன்
வைகாசி 12 26.05.2025 திங்கள்
வைகாசி 13 27.05.2025 செவ்வாய்
வைகாசி 22 05.06.2025 வியாழன்
வைகாசி 26 09.06.2025 திங்கள்
வைகாசி 27 10.06.2025 செவ்வாய்.

### போர் போட உகந்த தினம்
வைகாசி 04 18.05.2025 ஞாயிறு
வைகாசி 05 19.05.2025 திங்கள்
வைகாசி 14 28.05.2025 புதன்
வைகாசி 18 01.06.2025 ஞாயிறு
வைகாசி 23 06.06.2025 வெள்ளி
வைகாசி 28 11.06.2025 புதன்

# வைகாசி மாத விரத தினங்கள்

| விரதத்தின் பெயர் | தமிழ் மாதம் | கிழமை / தேதி | வழிபாடு மற்றும் பலன்கள் |
|---|---|---|---|
| சங்கடஹர சதுர்த்தி | வைகாசி 02 | 16.05.2025 வெள்ளி | விரதமிருந்து சந்திரனை தரிசனம் செய்த பின்பு விநாயகரை வழிபட்டு பின்பு போஜனம் செய்து வர கவலைகள் குறையும். |
| திருவோண விரதம் | வைகாசி 04 | 18.05.2025 ஞாயிறு | உபவாசம் இருந்து மகாவிஷ்ணுவை வழிபாடு செய்து வர பாபங்கள் விலகி உயர்வு உண்டாகும். |
| சஷ்டி விரதம் | வைகாசி 04 | 18.05.2025 ஞாயிறு | விரதமிருந்து முருகரை வழிபாடு செய்து வர செல்வ சேர்க்கையும் உயர் பொறுப்புகளையும் அடைய முடியும். |
| அஷ்டமி | வைகாசி 06 | 20.05.2025 செவ்வாய் | மாலையில் காலபைரவரை வழிபாடு செய்து வர ஆயுள் விருத்தி உண்டாகும். |
| ஏகாதசி | வைகாசி 09 | 23.05.2025 வெள்ளி | உபவாசம் இருந்து பெருமாளை வழிபட வாழ்க்கையில் இருந்து வந்த இன்னல்கள் நீங்கி சுபிட்சம் உண்டாகும். |
| சனி மஹா பிரதோஷம் | வைகாசி 10 | 24.05.2025 சனி | சிவபெருமானை வழிபாடு செய்து வர கர்மவினைகள் குறையும். |
| சிவராத்திரி | வைகாசி 11 | 25.05.2025 ஞாயிறு | சிவபெருமானை வழிபாடு செய்து வர கர்மவினைகள் குறையும். |
| அமாவாசை | வைகாசி 12 | 26.05.2025 திங்கள் | பித்ருக்களுக்கு தர்ப்பணம் அல்லது பித்ருக்களுக்கு படையல் செய்து பசுமாட்டிற்கு அகத்திக்கீரை கொடுத்த பின்பு போஜனம் செய்து வர பித்ருக்களின் ஆசிகள் பரிபூரணமாக கிடைப்பதுடன் முன்னேற்றமான வாழ்க்கை தரமும் உண்டாகும். |
| கிருத்திகை விரதம் | வைகாசி 12 | 26.05.2025 திங்கள் | முருக பெருமானையும் மஹாலட்சுமியையும் வழிபட்டு பின்பு போஜனம் செய்து வர மழலை செல்வமும் ஐஸ்வர்யத்தையும் பெறமுடியும் |
| சந்திர தரிசனம் | வைகாசி 14 | 28.05.2025 புதன் | சந்திரனை வழிபட முன்னேற்றம் உண்டாகும். |
| சதுர்த்தி | வைகாசி 16 | 30.05.2025 வெள்ளி | விரதமிருந்து சந்திரனை தரிசனம் செய்த பின்பு விநாயகரை வழிபட்டு பின்பு போஜனம் செய்து வர கவலைகள் குறையும். |
| சஷ்டி விரதம் | வைகாசி 18 | 01.06.2025 ஞாயிறு | விரதமிருந்து முருகரை வழிபாடு செய்து வர செல்வ சேர்க்கையும் உயர் பொறுப்புகளையும் அடைய முடியும். |
| அஷ்டமி | வைகாசி 20 | 03.06.2025 செவ்வாய் | மாலையில் காலபைரவரை வழிபாடு செய்து வர ஆயுள் விருத்தி உண்டாகும். |

# வைகாசி மாத ராசிபலன்



## விடாப்பிடியாக செயல்படும் மேஷ ராசி அன்பர்களே..!!



சூரியன் 2ல் இருப்பதால் பார்வை சார்ந்த பிரச்சனைகள் குறையும். நிதானமான பேச்சுக்கள் உங்கள் மீதான நம்பிக்கையை மேம்படுத்தும்.

செவ்வாய் 04ல் இருப்பதால் மனதில் இனம் புரியாத குழப்பங்களால் ஒரு விதமான சோர்வுகள் ஏற்படும்.

வைகாசி 25 முதல் செவ்வாய் 05ல் இருப்பதால் கலை சார்ந்த பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள்.

வைகாசி 02 முதல் புதன் 02ல் இருப்பதால் தனம் நிமித்தமான சிந்தனைகள் அதிகரிக்கும். சூழ்நிலை அறிந்து செயல்பட்டு நினைத்ததை முடிப்பீர்கள்.

வைகாசி 19 முதல் புதன் 03ல் இருப்பதால் புதிய முயற்சிகளுக்கு சாதகமான சூழல்கள் அமையும். பார்வை தொடர்பான பிரச்சனைகள் கட்டுப்பாட்டுக்குள் வரும்.

சுக்கிரன் 12 ல் இருப்பதால் வாடிக்கையாளர்களின் தேவைகளை அறிந்து செயல்படவும். ஆடம்பர பொருட்கள் மீதான ஈர்ப்புகள் அதிகரிக்கும்.

வைகாசி 17 முதல் சுக்கிரன் ராசியில் இருப்பதால் தடைப்பட்ட பணிகளை செய்து முடிப்பீர்கள். மனதில் புதுவிதமான சிந்தனைகள் பிறக்கும்.

குரு 03ல் இருப்பதால் மனதில் எண்ணிய சில பணிகளை செய்து முடிப்பீர்கள்.

சனி 11ல் இருப்பதால் வியாபாரத்தில் புதிய முயற்சிகள் ஈடேறும்.

ராகு 11ல் இருப்பதால் கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றுவீர்கள்.

கேது 05ல் இருப்பதால் கடன்களை தீர்ப்பதற்கான உதவிகள் கிடைக்கும்.

**வழிபாடு**:அம்பாளை தீபம் ஏற்றி வழிபட செய்தொழில் சிறக்கும்.